**கொக்குவில் இந்துக் கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம் (கனடா)**
**KOKUVIL HINDU COLLEGE**
**OLD STUDENTS ASSOCIATION (CANADA)**
**2019**

## 9 வயதுக்கு உட்பட்டோர் – ஆண் / பெண்

## பேச்சுப் போட்டி

# இறை வழிபாடு

இறை வழிபாட்டில் நம்பிக்கையும், மனத்தூய்மையும் மிக இன்றியமையாதது. இறைவனை நாம் நம்பிக்கையுடனும், மனத்தூய்மையுடன் வழிபட வேண்டும். தினமும் காலையும், மாலையும் இறைவழிபாடு செய்தல் அவசியமாகும். பிற உயிர்களுக்கு நாம் எவ்வித தீங்கையும் செய்தல் கூடாது. பொய் சொல்லுதல், களவு செய்தல், புறம் கூறுதல், தீய வார்த்தைகளைப் பேசுதல், மது அருந்துதல், கொலை செய்தல் என்பன பாவச் செயல்களாகும். பிற உயிர்களுக்குச் செய்யும் நன்மைகளே நாம் இறைவனுக்குச் செய்யும் தொண்டாகும்.

இறைவனுக்கு ஊரில்லை, பேரில்லை, அவன் விருப்பு, வெறுப்பு அற்றவன். குணம், குறிகளைக் கடந்து நிற்பவன். உருவம் இல்லாதவன். அதனாலேயே நம் முன்னோர்கள் இந்துசமயத்தில் இறைவனை நினைக்கும் வண்ணம் குறியீடாக பல உருவங்களை உருவகித்தனர். அவ் உருவங்களுக்கு பெயரும் இட்டனர்.

உலகில் பல சமயங்கள் உள்ளன. புத்தரால் பௌத்த சமயம் உருவானது. இயேசுநாதரால் கிறிஸ்தவ சமயம் உருவானது. முகமது நபிகளால் இஸ்லாம் சமயம் உருவானது.

எல்லா மதங்களும் ''*இறைவன் அன்பே வடிவானவன்*'' எனக் கூறுகின்றன. ஆதலால் நாம் எந்தச் சமயத்தைப் பின்பற்றுகிறோமோ அதன்வழி நிற்போம். ''எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டி, அகிம்சை வழிநின்று, அறவாழ்வு வாழ்வோம்''.

*********